[3rd November 1966

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** மாநில பனைவெல்லச் சங்கத்தைச் சார்ந்த இடம். திருப்பிக் கொடுப்பது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்; மறுத்தார்கள் என்று சொன்னுல் என்ன செய்ய முடியும் என்று பிறகு பார்க்கலாம்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** இது கொள்கை சம்பந்தப்பட்ட கேள்வி. இந்த என்க்ரோச்மென்டைக் காலி செய்வதற்கு ரெவின்யூ இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டுமா அல்லது கூட்டுறவு இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. இந்த மாதிரி ஆக்கிரமித்துக் கொண்டால் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கு இந்த அரசாங்கத்தில் விதிகள் இருக்கின்றனவா ? விதிகள் இருந்தால் அது மற்றவர்களுக்கும் அப்ளிகபிள் ஆக இருக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** இதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்ல முடியும்.

## ரயில்வே செஸ் நிதி

* 377 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு, 1961-ம் ஆண்டு ரெயில்வே செஸ் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதை செலவு செய்யும் விதம்பற்றி அரசினர் ஏதேனும் ஆணையிட்டிருக்கின்றனரா?

(உ) அதன்படி செலவழிக்கப்பட்டதா?

(எ) இல்லையெனில், தர்மபுரி மாவட்டத்திற்கேற்ற பங்கினை பிரித்துக் கொடுக்க அரசினர் ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ரூ. 25,57,001.

(இ) ஆம். ரெயில்வே செஸ் நிதியிலிருந்து முதற் பொறுப்பாக தொடக்கப்பள்ளிகள் கட்டுவதற்கும் பின்னர் தாய் சேய் நல விடுதிகள், மருந்தகங்கள் கட்டுவதற்கும் செலவிடவேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) இல்லை.

(எ) இதை சேலம் கலெக்டர் கவனித்து வருகிருர்.

**திரு. ம. கமலநாதன் :** மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக இந்த 25 லட்சம் ரூபாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டம் 1961-ல் தீர்மானம் போட்டு அரசினருடன் தொடர்பு கொண்டது. இது வரை அரசினரிடமிருந்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. சென்ற பட்ஜெட் கூட்டத்தில் இதைப் பற்றிக் கேட்டபோது, கனம் முதலமைச்சர் அவர்கள், ' கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்க முடியாது; அந்தத் தொகை எதற்குப்

பயன்படுத்த வேண்டுமோ அந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் படும்' என்று சொன்னார்கள். மீண்டும் அபிவிருத்தி மன்றம் அந்தத் தொகையை மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான செலவுகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. இந்தத் தொகை அதற்கு செலவழிக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்ட அனுமதி வழங்க மறுக்கப்பட்டிருப்பதால், ஏற்கனவே உள்ள கொள்கை அடிப்படையில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடத் திற்கும், தாய் சேய் நல விடுதிகள், மருந்தகங்கள் கட்டுவதற்கும் அந்தத் தொகை பயன்படுத்தப்படும். தருமபுரி மாவட்டத்திற் கான பங்கைப் பிரித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் சேலம் கலெக்டரால் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ம. கமலநாதன்** : அரசினர் இந்தத் தொகையை மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களுக்காகப் பயன்படுத்த வேண்டு மென்று உத்தரவு பிறப்பிப்பார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : அந்தத் தொகையை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று கலெக்டருக்கு உத்தரவு சென்றிருக் கிறது என்று சொன்னேன். அதற்கு என்ன அர்த்தம் என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்** : மாவட்ட அபிவிருத்தி மன்றத் தில் இருந்து அந்த 25 லட்சம் ரூபாய் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு நடந்தக் கூட்டங்களில் அதைப் பற்றிக் கேட்டபோது அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களுக்கு அந்தத் தொகை பயன் படுத்தப்படுமா இல்லையா என்பதற்குத் திட்டவட்டமான பதில் சொல்லவில்லை. இங்கே 'இல்லை' என்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால், கலெக்டர் அவர்கள், மருத்துவக் கல்லூரிக் கட்டடங் களுக்குப் பயன்படுத்துவதற்கான உத்தரவு வழங்குவது பரிசீலனை யில் இருக்கிறது என்று சொல்கிறார். நிலைமை என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : பொதுவாக, ராஜ்ய அடிப்படை யில் எல்லா மாவட்டங்களிலும் இம்மாதிரி ரெயில்வே செஸ் நிதியை எந்தெந்த இனங்களுக்காகச் செலவழிக்கலாம் என்பது பற்றி மெயின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது கூறினேன். அந்த அடிப்படையில் எல்லாக் கலெக்டர்களும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சேலம் சம்பந்தப்பட்டவரையில் அபி விருத்தி மன்றத் தீர்மானம் கொள்கையளவில் மறுக்கப்பட்டிருக் கிறது. அதற்கு பதிலும் சென்றிருக்கிறது. அதற்கு மேல் சர்க்கார் கொள்கை அடிப்படையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கட்டவும், தாய் சேய் நல விடுதிகள், மருந்தகம் கட்டவும் கவனம் செலுத்துவார்கள் என நம்புகிறேன்.